# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 14,480 —1965 අගෝස්තු 13 වැනි සිකුරාදා — 1965.8.13

14,480 ம் இலக்கம்—1965 ம் ஆண்டு ஓகத்து மாதம் 13 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV—உள்ளூர் ஆட்சி

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்துவைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளது.]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| உள்ளூராட்சி அறிவிப்புகள் .. .. | 93 | வரவு செலவுக் கூற்றுக்கள் .. .. | — |
| பதவிகள்—வெற்றிடம் .. .. .. | — | வரவு செலவுத் திட்டங்கள் .. .. | — |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும், பிறவும் .. | — | ஆதன விற்பனைகள் .. .. .. | — |
| துணை விதிகள் .. .. .. | 94 | விதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் .. .. | — |
| உள்ளூராட்சி அதிகார நிலையத் தேர்தற் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் .. .. . | — | நானாவிதம் .. .. .. | — |


## உள்ளூராட்சி அறிவிப்புகள்

### வாடி வீடுகள் சட்டம்

கம்பஹாவிலுள்ள வாடி வீடு விடயமாக, அதற்கான உரிய அதிகாரியாகிய கம்பஹா நகரசபையால் (275 ஆம் அத்தியாயமான) வாடிவீடுகள் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்டு, அப்பிரிவால் உள்ளூராட்சி அமைச்சருக்கு உரித்தாக்கப்பட்ட அதிகார பலத்தைக் கொண்டு அவரால் அங்கீகரிக்கப்பட்ட விதி.

ஏ. ஈ. கோகர்லி மொரகொட,
நிரந்தரச் செயலாளர்,
உள்ளூராட்சி அமைச்சு,

கொழும்பு 1,
1965 ம் ஆண்டு ஜூலை மீ 26 ந் உ.

8-489—13.8.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,480

#### விதி

(275 ஆம் அத்தியாயமான) வாடிவீடுகள் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் கம்பஹா நகரசபையால் ஆக்கப்பட்டு 1953, ஏப்பிறல் 25 இன் 11,302 ஆம் இலக்க கசெற்றில் பிரசுரிக்கப்பட்ட விதிகள், அதற்குள்ள அட்டவணை 1 இல் உள்ள 2 (1) (அ), 2 (1) (ஆ) ஆகிய பந்திகளுக்குப் பதிலாக கீழேயுள்ளதை இடுவதன் மூலமும்,

"2. (துணிகளின் உபயோகம் உட்பட) படுக்கை அறை உபயோகத்துக்கு.

(1) 25 அல்லது அதற்குக் குறைந்த மணித்தியாலங்கள் கொண்ட ஒரு காலத்துக்கு ஆள் ஒருவருக்கு ரூபா 5.00".

அட்டவணை 1 இல் உள்ள பந்தி 2 (ii) ஐயும் அட்டவணை II ஐயும் நீக்குவதன் மூலமும், இத்தால், திருத்தப்படுகின்றன.

---

### பட்டின சபை மீரிகம
### பட்டின சபைகள் கட்டளைச் சட்டம்
#### 1965 க்கான மலகூட வரி

மீரிகம பட்டின சபையானது, (256 ஆம் அத்தியாயமான) பட்டின சபைகள் கட்டளைச் சட்டத்தின் 129 (ஆ) பிரிவின் கீழும், அப்பிரிவால் உள்ளூராட்சி அமைச்சருக்கு உரித்தாக்கப்பட்ட அதிகார பலத்தைக் கொண்டு அவரால் வழங்கப்பட்ட அங்கீகாரத்துடனும், சபையால் விதிக்கப் படக்கூடிய மட்டுப்படுத்தல்களுக்கும் வரையறைகளுக்கும், நிபந்தனைகளுக்கும் அமைய, மீரிகம பட்டினத்துக்குள் அமைந்துள்ளனவும் இதற்குள்ள அட்டவணையில் சொல்லப்படுவனவுமான அசைவற்ற சொத்துகளின் ஆண்டுப் பெறுமதியில் நூற்றுக்கு ஐந்து வீதமான வரி ஒன்றை, இரண்டு தவணைக் கட்டணங்களாக முறையே செப்ரெம்பர் 30 லும், டிசெம்பர் 31 லும் செலுத்தக்கூடியதாக, 1965 ஆம் ஆண்டுக்கு, விதித்திருக்கின்றதெனறு இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

ஏ. ஈ. கோகர்லி மொரகொட,
நிரந்தரச் செயலாளர்,
உள்ளூராட்சி அமைச்சு.

கொழும்பு 1,
1965 ம் ஆண்டு ஜூலை மீ 26 ந் உ.

#### அட்டவணை

கீழ்க்காணும் வரி மதிப்பு இலக்கங்களைக் கொண்ட வளவுகள் அமைந்துள்ள பிரதேசங்கள் :—

**வட்டாரம் இல. 1.** அம்பேபுச தெரு : 35/6.
கிரியுல்ல தெரு : 57 ; 69 ; 75 ; 79 ; 83 ; 93, 103, 105, 107, 113, 117, 123, 78, 120/1, 120/3, 122, 170.

**வட்டாரம் இல. 2.** தனோவிட்ட தெரு : 24, 118.

**வட்டாரம் இல. 3.** பஸ்யால தெரு : 91, 97, 109/1, 119/1, 119/7, 119/8, 119/9, 119/10, 119/11, 119/12, 119/13, 119/14, 119/17, 119/18, 121, 123, 125, 127, 129, 131, 135, 137, 141, 143, 145, 147, 215, 217, 219, 221, 223, 225, 227, 229, 231, 233, 235.
சுமணசாரமாவத்தை : 19.

**வட்டாரம் இல. 4.** பஸ்யால தெரு : 241, 265, 271, 283, 285/1.

**வட்டாரம் இல. 5.** கிரியுல்ல தெரு : 19, 23, 39, 43.
பஸ்யால தெரு : 2.

8-479—13.8.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,480

# துணை விதிகள்

எல்.டீ.–பீ.14/52.

## இரத்தினபுரி நகர சபை

### நகர சபைக் கட்டளைச் சட்டம்

(255 வது அத்தியாயமான) நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 153 ம், 157 ஆகிய பிரிவுகளின் பிரகாரம் இரத்தினபுரி நகர சபையால் ஆக்கப்பட்டு, அக்கட்டளைச்சட்டத்தின் 154 ம் பிரிவின் பிரகாரம் உள்ளூராட்சி அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட உப விதி.

ஏ. ஈ. கோகர்லி மொரகொட,
நிரந்தரச் செயலாளர்,
உள்ளூராட்சி அமைச்சு.

கொழும்பு,
26.7.1965

### உப விதி

1931, செப்ரெம்பர் 18 இன், 7,882 ம் இலக்க கசெற்றிற் பிரசுரிக்கப்பட்ட அடைவு பிடித்தல் சம்பந்தமாக இரத்தினபுரி நகர சபையால் ஆக்கப்பட்ட உபவிதிகள், அவற்றின் 1 ம் உபவிதிகள்:—

அவற்றின் ம் உபவிதியில், " ஐம்பது சதம் " என்னுஞ் சொற்களுக்குப் பதிலாக " இரண்டு ரூபா " என்னுஞ் சொற்களைச் சேர்த்தல்மூலம் இதனுற் திருத்தப்படுகின்றன.

8-484—13.8.65 ந திகதிய வர்த்தமானி இல. 14,480

வெள்ளிக்கிழமை தோறும் இலங்கை அரசாங்க வர்த்தமானி வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

வெளியாவதற்கு நான்கு வேலை நாட்களுக்கு முன் பி. ப. 3.30 மணிக்குள் (சாதாரணமாக திங்கட்கிழமை பி. ப. 3.30 மணி) அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு, அவர்கட்கு சகல அறிவித்தல்களும், விளம்பரங்களும் வந்துசேரவேண்டும்.

அரசாங்க வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், தபால் பெட்டி இல. 500, கருமாலயம், கொழும்பு, அவர்கட்கு நேரடியாக சேர்ப்பிக்கப்படவேண்டும். அரசாங்க அழுத்தகன் வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் எதுவும் ஏற்றுக் கொள்ளமாட்டார்.

இலங்கை வாழைச்சேனை ஈஸ்ரேண் பேப்பர் மில்ஸ் கோப்பரேஷனுல் உற்பத்தி செய்யப்பட்ட காகிதத்தில்
இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.